# வாழ்க்கைத்தர விருத்திக்கு சுற்றுலாத்துறையின் பங்களிப்பு –மட்டக்களப்பு பாசிக்குடாவை மையப்படுத்திய ஆய்வு –

## Contribution of Tourism on Quality of Life – Study based on Pasikuda, Batticaloa –

Mohamed Thamby Mohamed Rizvi
Senior Lecturer Gr-I
Eastern University, Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

சுற்றுலாத்துறையானது உள்ளூர் மக்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்புச் செய்யும் ஒரு துறையாகும். இது பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், குறித்த ஆய்வு பிரதேசத்தில் பாசிக்குடா எனும் பிரபல்யம் வாய்ந்த சுற்றுலாத் தளம் காணப்பட்டாலும் அம் மக்களிடம் வறுமை நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதற்கான காரணிகளை கண்டறிவதற்காக முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி பண்புசார் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலைதரவு சேகரிப்புக்காக நேர்காணல், நேரடி அவதானம், கலந்துரையாடல் என்பன பயன்படுத்தப்பட்டன. சுற்றுலாத்துறை மூலம் வாழ்க்கைத்தரம் விருத்தியடையாமைக்கு பல காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவற்றுள் தேர்ச்சி மட்டம் குறைவு, மொழிவளம் இன்மை, இணக்கப்பாடற்ற அபிவிருத்திகள், கட்டுமானங்கள், வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு இன்மை போன்றன முக்கியமானவைகளாகும். எனவே குறித்த பிரச்சினைக்கு காரணிகளாக இனங்காணப்பட்ட விடயங்களை அகற்றி, புதிய அனுகுமுறை ஒன்றினை கையாள்வதன் மூலம் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் சுற்றுலாத் துறை வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :-** சுற்றுலாத் துறை, வாழ்க்கைத் தரம், பாசிக்குடா

### அறிமுகம்

வாழ்க்கைத்தரம் என்பது தற்காலத்தில் பலராலும் பேசப்படுகின்ற ஒரு எண்ணக்கருவாகும். உலகில் பல நாடுகள் தமது குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக வாழ்க்கைத்தரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. வாழ்க்கைத்தரம் எனும் எண்ணக்கரு பிகே (Pigou) என்பவரால் 1920ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. எனினும்,கி.பி. 1950களிலேயே இவ்வார்த்தைப் பிரயோகம் பரவலடைந்தது.

வாழ்க்கைத்தரம் என்பது பலராலும் பலவாராக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. கோட்பிரே (Godfrey) (2002) என்பவர் கூறுகிறார்: "வாழ்க்கைத்தரம் என்பது மக்களின் சமூக, பொருளாதார மற்றும் சூழல் நலன்களில் விருத்தி ஏற்படுவதாகும்." சுற்றுலா என்பது மக்கள் தங்களது சொந்த இடங்களை விட்டு ஓய்வினை கழிப்பதற்காக, பொழுதுபோக்கிற்காக, கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்காக மேற்கோள்கின்ற பயணமாகும். செல்லும் இடம், நோக்கங்கள், கால எல்லை, செலவுகள் மீளத்திரும்புதல் போன்ற பல விடயங்களை இது உள்ளடக்குகின்றது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

உலகில் மிக வேகமாக முன்னேறி வரும் துறைகளுள் சுற்றுலா துறையும் ஒன்றாகும். "ஒரு நாட்டிற்கோ, நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ, வெளிநாட்டு பயணிகள் வருகை தருவது, தங்கிச்செல்வது, பொருளாதார நோக்குடையது போன்ற அனைத்து செயற்பாடுகளின் தொகுப்பே சுற்றுலாவாகும்" (ஹெர்மன் விதலாட், 1991). இச்சுற்றுலாத்துறையானது நாட்டின் அந்நியச் செலாவணி மற்றும் மொத்த தேசிய வருமானத்தில் பாரிய செல்வாக்குச்செலுத்துகின்றது. அந்த வகையில் இலங்கை சுற்றுலாத்துறை மூலமாகப் பெற்றுக்கொண்ட வருமானத்தை அட்டவணை 1 காட்டுகின்றது.

சுற்றுலாத்துறை மூலமான வருமானம்

| ஆண்டு | வருமானம் (ரூபா மில்லியனில்) |
|---|---|
| 2010 | 65,018 |
| 2011 | 91,926 |
| 2012 | 132,427 |
| 2013 | 221,720 |
| 2014 | 317,479 |
| 2015 | 405,492 |
| 2016 | 512,373 |
| 2017 | 598,143 |
| 2018 | 711,961 |
| 2019 | 646,362 |

அட்டவனை : 01
(மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2020)

எனவே, சுற்றுலாத்துறையானது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழலில் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும். சுற்றுலாத்துறையின் பொருளியல்சார் விளைவின் மூலம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முடியும். இத்துறை மூலம் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் போது அதன் மூலம் வருமானம் அதிகரிக்கும். விளைவாக, உள்ளூர் மக்களின் அல்லது சுற்றுலாத்தளங்களோடு இணைந்து வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முடியும். மட்டுமன்றி, பல்வேறுபட்ட வரிகளின் மூலம் நாட்டின் மொத்த வருமானத்திற்கும் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது.

மேற்குறித்த கூற்றினை, கடந்த காலங்களில் இலங்கை பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை மூலமாகப் பெற்றுக்கொண்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களை ஆதாரமாகக் கொண்டு நிறுவ முடியும். அதனை அட்டவணை 2 காட்டுகின்றது.

இலங்கையில் சுற்றுலாத்துறை மூலமான வேலை வாய்ப்பு

| ஆண்டு | நேரடி வேலை வாய்ப்பு | உத்தேசிக்கப்பட்ட மறைமுக வேலை வாய்ப்பு | மொத்த வேலை வாய்ப்பு |
|---|---|---|---|
| 2010 | 55,023 | 77,032 | 132,055 |
| 2011 | 57,786 | 80,899 | 138,685 |
| 2012 | 67,862 | 95,007 | 162,869 |
| 2013 | 112,550 | 157,600 | 270,150 |
| 2014 | 129,790 | 170,100 | 299,890 |
| 2015 | 135,930 | 183,506 | 319,436 |

| | | | |
|---|---|---|---|
| 2016 | 146,115 | 189,544 | 335,659 |
| 2017 | 156,369 | 202,846 | 359,215 |
| 2018 | 169,003 | 219,484 | 388,487 |
| 2019 | 173,592 | 229,015 | 402,607 |

அட்டவனை : 02
(மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2020)

சுற்றுலாத்துறையின் சமூக ரீதியான விளைவை நோக்கின், பல்வேறுபட்ட கலாசார முறைமைகளை அறிந்து கொள்வதற்கு காரணமாகவும், அதன் வழியாக வாழ்க்கை தரத்தினை விருத்தி செய்து கொள்ளவும், கலாசார பாரம்பரியங்களை பாதுகாக்கவும் வழிகோலுகின்றது. அவ்வாறே உலகில் பெரியளவிலும் விரைவாகவும் வளர்ச்சி அடைந்து வரும் சுற்றுலாத்துறையானது சுற்றுச்சூழலோடு பெரும் தொடர்பைக் கொண்டுள்ளது. விளைவாக, சுற்றுச்சூழலுக்கு அழகுபடுத்துதல், மரபுரிமைகளை பாதுகாத்தல் போன்ற நன்மைகளோடு, சூழல் மாசுபடுதல், வளச்சுரண்டல் போன்ற தீமைகளும் ஏற்படுகின்றன.

பொதுவாக சிறந்த சுற்றுலாவானது சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த விடுமுறை அனுபவங்களையும், தொழில் முனைவோருக்கு நல்லதொரு தொழில்வாய்ப்பினையும், சமூகத்திற்கான வாழ்க்கைத்தரத்தினையும் வழங்க வேண்டும்.

அந்த வகையில், ஐக்கிய நாடுகள் சபையில் சர்வதேச சுற்றுலா ஒன்றியத்தின் (UNWTO, 2017) அறிக்கையின் பிரகாரம்,“சர்வதேச சுற்றுலா பயணிகளின் வருகை 2014ஐ விட 2015ல் 4.4 வீதத்தினால் அதிகரித்துள்ளது. 2030ல் அதன் எண்ணிக்கை 1.8 பில்லியனை அடையும் எனவும் எதிர்பார்த்துள்ளது.”

இலங்கை பன்னெடுங்காலமாக வெளிநாட்டவர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் ஒரு நாடாகத்திகழ்கின்றது. இதற்கு இலங்கையின் அமைவிடமும், அதன் பௌதீக அமைப்பும் காரணமாக அமைகின்றது. அத்தோடு இலங்கையில் காணப்படும் மரபு ரீதியான இடங்கள், பாரம்பரிய விழாக்கோலங்கள், கைவினைத்திறன்கள், செயற்பாட்டுக்கலைகள், ஆயுள்வேத மருந்துகள், சமையற்கலைகள், சம்பிரதாயங்கள் என்பனவும் அதற்கான முக்கிய உற்பத்தி தளமாகவும் விளங்குகின்றது. அந்த வகையில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையின் தொடர்ச்சியான அதிகரிப்பை பின்வரும் அட்டவணை 3 காட்டுகின்றது.

இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

| ஆண்டு | சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2010 | 654,476 |
| 2011 | 855,975 |
| 2012 | 1,005,605 |
| 2013 | 1,274,593 |
| 2014 | 1,527,153 |
| 2015 | 1,798,380 |
| 2016 | 2,050,832 |
| 2017 | 2,116,407 |

| | |
|---|---|
| 2018 | 2.333,796 |
| 2019 | 1,913,702 |

அட்டவனை : 03
(மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2020)

உலக சுற்றுலா நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்ட உலகிலுள்ள 302 சுற்றுலாப் பிரதேசங்களில் 06 இடங்கள் இலங்கையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுள் ஒன்றாக பாசிக்குடா காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கை அரசாங்கம் சுற்றுலாத்துறை அபிவிருத்திற்காக சில முக்கிய இடங்களை அடையாளப்படுத்தி, திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி கடற்கரை, மட்டக்களப்பில் உள்ள பாசிக்குடா கடற்கரை, கல்பிட்டிய போன்ற மேலும் பல கடற்கரை பிரதேசங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றின் மூலம் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பதும் அதன் வழியாக பொதுளாதாரத்தில் அதன் செல்வாக்கும் தெளிவானதாகும்.

எனவே, இந்த ஆய்வின் வழியாக இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத்தளமான பாசிக்குடாவைக் கொண்டிருக்கும் கல்குடா பிரதேசமானது இன்னும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதற்கான காரணிகளை அடையாளப்படுத்தி அவற்றுக்கு தீர்வு வழங்குவதனைக் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் சுற்றுலாத் துறையானது 30 வருட யுத்தத்தின் பின்னர் வளர்ந்து வரும் ஒரு துறையாகும். யுத்தம் முடிவுற்றதன் பிற்பாடு அரசாங்கம் அதிகளவான தொகையினை நாட்டை அபிவிருத்தி செய்யவும், சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் முதலீடு செய்கின்றது. காரணம் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் சுற்றுலாத் துறையிலேயே தங்கியுள்ளன.

அந்த வகையில் சுற்றுலாத்துறையானது அதிகளவான நேர் மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதிலும், அதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியமான பங்களிப்புச் செய்யும் ஒன்றாகும். அத்தோடு பிரதேச அபிவிருத்தி சார்ந்ததாகவும், மக்களின் வருமான பரம்பல், தொடர்பாடல் என்பவற்றையும் பேணி மிகவும் வேகமாக முன்னேறி வரும் ஒரு துறையாகும்.

ஆனாலும், இலங்கையின் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளமான பாசிக்குடாவை தன்னகத்தே கொண்ட கல்குடா கிராம பிரிவில் மாத்திரம் வருமானத்தின் வறுமையின் விளைவொன்றாக அரசாங்க அனுசரணை சமூக பாதுகாப்புத்திட்டத்தின் அங்கமாக 447 குடும்பங்கள் இன்னும் சமுர்த்திப் பயனாளிகளாகவே காணப்படுகின்றனர் (Samurdhi office, of Valaichenai, 2020). இவ் எண்ணிக்கை மொத்த குடும்பங்களின் 60 சதவீதம் ஆகும் (Vagisha Gunasekera, Mira Philips and Vijay Nagar, 2016).

எனவே, இவ்வாறானதொரு சுற்றுலாத் தளம் இருந்தும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னும் வளர்ச்சியடையாமலேயே உள்ளது என்பதே ஆய்வுக்கான பிரச்சனையாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

**பிரதான நோக்கம்:**

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளமான பாசிக்குடாவை மையப்படுத்தியதாக அம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை எவ்வாறு மேம்படுத்ததலாம் என்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவது.

**துணை நோக்கங்களாக:**

சுற்றுலா துறையின் மூலம் குறித்த மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்படாமைக்கான தடைகளைக் கண்டறிதல்.

தடைகளை அகற்றுவதற்கான மாற்றுவழிகளை மும்மொழிதல்.

ஆகிய துணை நோக்கங்களுக்கூடாக பிரதான நோக்கம் அடையப்படும்.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுப் பிரதேசமான கல்குடா கிராமம் இலங்கை, கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா தேர்தல் தொகுதியில் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் நிருவாக எல்லைக்குள் அமையப் பெற்றுள்ளது. கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவு 641 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்டதாக காணப்படுகின்றது. இவற்றுள் ஒரு சிறு கிராமமாக கல்குடா பகுதியும் அதனுள் பாசிக்குடாவும் காணப்படுகின்றன.

பாசிக்குடா பிரதேசமானது 3 பக்கங்களும் கடலால் சூழப்பட்டதாகும். அது இலங்கை யின் தலைநகரன கொழும்பிலிருந்து 296.9 கிலோமீற்றராகும்.பிரதான நகரமான மட்டக்களப்பிலிருந்து சுமார் 35 கிலோமீற்றர் வடக்கில் அமைந்துள்ளது. அத்துடன் பாசிக்குடா சுமார் 150 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட கடற்கரையோர வலையத்தையும் கொண்டுள்ளது. பாசிக்குடாவின் மற்றுமோர் சிறப்பம்சம் அதன் முனைப்பகுதியில் கடல் அலைகள் வேகமாக உட்புகாத வண்ணம் அமைந்துள்ள அதன் முருகைக் கற்பாறைகளாகும். இப்பிரதேசமானது 30 வருட யுத்தத்தினாலும், 2004ம் ஆண்டு சுனாமி பேரலையினாலும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும்.

**இலக்கிய மீளாய்வு**

சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா துறையின் வாழ்க்கைத் தரத்தின் மீதான பங்களிப்பு என்பவற்றைப்பற்றி இலங்கையில் பல்வேறுபட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இவ்வாய்வானது தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் சுற்றுலாத்துறையின் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது தொடர்பான தனியான ஆய்வு மேற்கொள்ளப்படாமையை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நந்தசேன ரத்னபால (1999), என்பவரால் மேற்கொள்ளப்பட்ட "Tourism in Sri Lanka: The Social Impact" எனும் ஆய்வானது நீர்கொழும்பு, பேருவல, ஹிக்கடுவை, பெந்தோட்டை மற்றும் மவுண்டலாவன்யா ஆகிய 05 பிரதேசங்களை மையமாகக் கொண்டு சுற்றுலாக் கைத்தொழிலினால் ஏற்பட்டுள்ள சமூக ரீதியான தாக்கங்களை மதிப்பிட்டு, அதன் அடிப்படையில் முழு இலங்கைக்குமான தாக்கங்களை எதிர்வு கூறுகின்றது. மேலும் Sadrudin A.Ahmed என்பவரது "Perceptions of Tourism in Sri Lanka" என்ற ஆய்வில் சுற்றுலாத் துறையின் மூலம் இலங்கை பெற்றுக்கொள்ளும் அனுகூலங்களையும் அது அடைந்து கொள்ளக்கூடிய நன்மைகளையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

USAID (2012), எனும் நிறுவனம் "Tourism income generating and business opportunity mapping in Batticaloa district" எனும் புத்தகத்தை பொழிப்பாக்கியுள்ளது. அது இலங்கையில் தேசிய சுற்றுலா தொடர்பாக கவனத்திற் கொள்ளும் அதே வேளை மட்டக்களப்பில் சர்வதேச சுற்றுலா பயணிகளின் அனுகுமுறையையும் ஆராய்கின்றது. அதன் பிரதான நோக்கமாக மட்டக்களப்பில் சுற்றுலாத்துறை மூலமான மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் நன்மைகளை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ரனசிங்க (2015), என்பவர் “இலங்கையின் பல்வகைமை கொண்ட இயற்கை வனப்பும், கலாசார பாரம்பரியங்களும் சுற்றுலா வாய்ப்புக்களுக்கான பரந்த சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது” என்றும் “தங்கால, ஹம்பாந்தோட்டை, பாசிக்குடா, உநவட்டுன, அருகம்பே போன்ற கவர்ச்சிகரமான கரையோரப் பிரதேசங்கள் அமைந்துள்ளதாகவும்” குறிப்பிடுகின்றார்.

அகாமா (1999), மன்யாரா, ஜோன்சன்ஸ்(2009), என்போர் தமது ஆய்வில் பின்வரும் கருத்தை தெரிவிக்கின்றனர். ஆதிகமான இடங்களில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருவாய் உள்நாட்டு மக்களின் நன்மைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. அதேவேளை கொன்ஸ்டண்டா (2009), சுற்றுலாத்துறை வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியது என கருத்து தெரிவித்துள்ளார்.

“வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் சுற்றுலாத்துறையின் செல்வாக்கு” எனும் தலைப்பில் ஈரானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுற்றுலாத்துறை குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. (Aref, 2011)எனவே, மேற்குறித்த ஆய்வுகளை முன்மாதிரியாகக் கொண்டு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல் :**

இவ்வாய்வானது பண்புசார் தரவுகளை மையப்படுத்தியதாகும். அத்தோடு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான முதனிலைத்தரவுகள் களஆய்வு,நேரடி அவதானம், உள்ளுர் மக்களுடனான கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் என்பவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது. அது தவிர குறித்த பிரதேச மீனவர்கள், ஹோட்டல் முகாமையாளர்கள், விடுதி ஊழியர்கள், துவிச்சக்கர வண்டி சாரதிகள், நடமாடும் வியாபாரிகள், நிரந்தர வியாபாரிகள், பிரதேச சபை மற்றும் சமுர்த்தி அதிகாரிகள் என்பவர்களோடு மேலதிக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. தகவல் தருனர்களை தெரிவு செய்வதில் எழுமாற்று மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. மோத்தமாக 50 பேர் நேர்காணப்பட்டனர். நேர்காணல் முறைசாரா அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக சுற்றுலா தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள்,நூல்கள், சஞ்சிகைகள், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, சமுர்த்தி அதிகாரசபை, இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் அறிக்கைகளும் பெறப்பட்டன.

ஆய்வுக்காக தொரிவு செய்யப்பட்ட மாதிரிகள்

| மாதிரிகள் | எண்ணிக்கை |
|---|---|
| நடமாடும் வியாபாரிகள் | 10 |
| நிரந்தர வியாபாரிகள் | 08 |
| துவிச்சக்கர வண்டி சாரதிகள் | 06 |
| மீனவர்கள் | 05 |
| விடுதி ஊழியர்கள் | 04 |
| கைத் தொழில் முனைவோர் | 03 |
| ஹோட்டல் முகாமையாளர்கள் | 02 |
| பிரதேச சபை அதிகாரி | 01 |

| | |
|---|---|
| சமுர்த்தி அதிகாரி | 01 |
| மேலுள்ள பட்டியலில் உள்ளடங்காத பிரதேச மக்கள் | 10 |
| **மொத்தம்** | **50** |

அட்டவனை : 04(ஆய்வு மாதிரிகள்)

சேகரிக்கப்பட்ட தகவல்கள் விவரண அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**தரவு முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட ஆய்வு நுட்பங்களான நேரடி அவதானிப்பு, களஆய்வு, நேர்காணல் மற்றும் கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் தரவுகள் பெறபட்டுள்ளன. அவை ஒன்றித்த கருத்துக்களின் அடிப்படையில் தனித்தனி சிறு தலைப்புக்களின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்வரும் உபதலைப்புக்களின் கீழ் அவற்றின் முடிவுகள் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறை மூலமான வாழ்வாதார மேம்பாட்டை கணிப்பதற்கு வாழ்வாதாரத்தின் 03 பிரதான காரணிகள் கவனத்திற்கொள்ளப்பட்டு, நேர்முகம் மற்றும் கலந்துரையாடலில் அவற்றை மையப்படுத்தியே கேள்விகள் தொடுக்கப்பட்டன.

1. சுற்றுலாத்துறை மூலமான பொருளாதார தாக்கம்.
2. சுற்றுலாத்துறை மூலமான சமூக தாக்கம்.
3. சுற்றுலாத்துறை மூலமான சூழல் தாக்கம்.

**1. சுற்றுலாத்துறை மூலமான பொருளாதார தாக்கம்.**

**1.1. கடற் தொழிலில் சுற்றுலாத்துறையின் தாக்கம்.**

பாசிக்குடாவானது மீன்பிடித்தலை பிரதான தொழிலாகக் கொண்ட ஒரு பிரதேசமாகும். அங்குள்ள அதிகளவான மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கு மீன்பிடியையே பயன்படுத்தினர். தனிப்பட்ட குடும்பங்களுக்கு மட்டுமன்றி முழுநாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும், வருமானத்திற்கும் பிரதான மூலமொன்றாக மீன்பிடித்தல் அமைந்துள்ளது.எனினும், வளர்ந்து வரும் சுற்றுலாத்தளங்களின் அபிவிருத்திகளால் மீனவர்களும், அவர்களின் குடும்பங்களும் கடல் பிரதேசத்திலிருந்து தூரப்படுத்தப்பட்டுள்ளனர் (நேரடி அவதானிப்பு, 21 செப்டம்பர் 2020)

முப்பது வருட யுத்தம், சுனாமிப் பேரலை மற்றும் மீனவர்களோடு கலந்தாலோசிக்கப்படாத சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பன இப்பகுதி மக்களின் மீன்பிடித்தொழிலில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. (நேர்காணல், மீனவர்கள், 21 செப்டம்பர் 2020)

கல்குடாவைச் சேர்ந்த 50 வயது மதிக்கத்தக்க மீனவர் ஒருவர் பின்வருமாறு கூறினார்: ''ஏற்கனவே தற்போது ஹோட்டல்கள் அமையப்பெற்றுள்ள கடற்கரையில் நாங்கள் படகுகளை நிறுத்தி வைத்தோம். ஆனால் ஹோட்டல் அபிவிருத்தியின் காரணமாக மிகவும் சிறிய பகுதியொன்றிற்கு நகர்வதற்கு நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோம்'' (நேர்காணல், 21 செப்டம்பர் 2020).

உள்ளூர் மக்கள் கடலை அடைவதற்கு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவர்களின் தங்குமிடங்களிலிருந்து கடலை அடைவதற்கு சுமார் 05 கிலோமீற்றர் தேவைப்படுகின்றது. 450க்கும் அதிகமான மீனவர்கள் 300 மீற்றருக்கும் குறைவான கடற்கரைப் பிரதேசத்தையே தமது தேவைக்காக பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர் (நேரடி அவதானிப்பு, 22 செப்டம்பர் 2020).

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR 

இவ்வாறான சிரமங்களை சந்திக்க நேரிடுவதால் அதிகளவான மீன்பிடித்தொழிலாளர்கள் தமது தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களுக்கு மாறும் மனநிலையுடன் காணப்படுகின்றனர். இந்நிலை தொடருமானால் குறித்த பிரதேசம் தமது வாழ்வாதாரத்தை இழப்பதோடு நாட்டின் பொருளாதார விருத்தியிலும் அது பாரிய இழப்பை ஏற்படுத்தக்கூடும் எனவும் அம்மக்களின் வருமை நிலை மேலும் மோசமடையலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**1.2.சுற்றுலாத்துறை சார்ந்த வேலைவாய்ப்பில் உள்ளூர் மக்களுக்கான சந்தர்ப்பங்கள்**

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு வேலை வாய்ப்பு இன்றியமையாததாகும். வேலை வாய்ப்பு ஒன்றின் மூலமே வருமானத்தை ஈட்ட முடியும். குறித்த வருமானம் போதுமானதாகவும் திருப்திகரமானதாகவும் இருக்கும் பட்சத்தில் மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தை விருத்தி செய்து கொள்வர்.

சுற்றுலாத்துறை மூலமாக இலங்கையில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான நேர் மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன (இலங்கை மத்திய வங்கி, 2020). எனினும், குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சுற்றுலாத்துறை மூலம் குறித்த மக்கள் பெற்றுக்கொண்ட வேலை வாய்ப்புக்கள் தொடர்பான கருத்துக்கள் திருப்தியளிப்பவையாக இல்லை.

இது தொடர்பாக உள்ளூர்வாசிகளிடம் வினவப்பட்ட போது பலரும் பின்வருமாறு கூறினார்கள்: ‘‘எமது நிலங்களில் பலரும் ஹோட்டல்களை அமைத்துள்ளனர். ஆனால், நாங்கள் வேலைகளுக்காக கொழும்பிலுள்ள ஹோட்டல்களுக்கு செல்ல வேண்டியுள்ளது. எமது மண்ணில் காணப்படும் இந்த ஹோட்டல்களில் எமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை’’(குழுக்கலந்துரையாடல், 23 செப்டம்பர் 2020).

குறித்த விடயம் தொடர்பாக ஹோட்டல் முகாமையாளர்கள் இருவரிடம் வினவிய போது அவர்கள் பின்வருமாறு தமது கருத்தினைத் தெரிவித்தனர். ‘‘உள்ளூர்வாசிகளில் அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமைக்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. விஷேடமாக ஹோட்டல் வேலை வாய்ப்பு, முகாமைத்துவம் தொடர்பாக அவர்கள் தேர்ச்சி பெற்றிருப்பதில்லை மற்றும் அவர்களிடம் ஆங்கில மற்றும் சிங்கள மொழியின் பரீட்சயம் மிகக் குறைவாகும்’’ (நேர்காணல், 24 செப்டம்பர் 2020).

எனினும் அவர்களில் ஒருவர் தமது பணியாளர்களில் 25-40 வீதமானோர் உள்ளூர்வாசிகளே எனக்கூறினார். ஆனால், இது தொடர்பாக ஹோட்டலில் கடமையாற்றும் உள்ளூர்வாசிகள் தமது எதிர்க்கருத்தை தெரிவித்தனர். ‘‘அதாவது தமது பிரதேசத்தில் உள்ளவர்களில் 50க்கும் குறைவானவர்களே இங்குள்ள எல்லா ஹோட்டல்களிலும் வேலை செய்பவர்கள்’’ என உறுதியாகக் கூறினர் (நேர்காணல், 24 செப்டம்பர் 2020).

மேலும் விடுதி ஊழியரில் ஒருவர் தமக்கு வழங்கப்படும் ஊதியம் வேலைக்குத் தகுந்தது அல்ல என்பதையும் தமது தொழிலுக்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது என்பதனையும் மனவேதனையுடன் தெரிவித்தார். அத்தோடு சுற்றுலாத்துறையில் தமது சமூகம் சார்ந்தவர்கள் கீழ்மட்ட ஊழியர்களாக மட்டுமே காணப்படுகின்றனர் என்றும் அவற்றுக்கான காரணம் தனக்கு தெரியவில்லை என்பதனையும் கூறிக்கொண்டார் (நேர்காணல், 24 செப்டம்பர் 2020).

இவ்வாறான கருத்துக்களை வைத்து நோக்கும் போது குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் சுற்றுலாத்துறைக்கான பல வேலை வாய்ப்புக்கள் காணப்பட்டும் கூட அங்குள்ள மக்களுக்கு அவற்றில் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அல்லது அவ்வேலைகளுக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இல்லை என்பதை உணரமுடிகின்றது.

**1.3.சுற்றுலாத்துறை சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள்**

சுற்றுலாத்துறையில் கைத்தொழில் அல்லது சிறு வியாபாரம் என்பது போதியளவான வருமானம் ஈட்டக்கூடிய ஒரு கருவியாகும். சுய கைத்தொழில் எல்லையற்ற தொடுவானமாக காணப்படுகின்றது. அந்த வகையில் குறித்த ஆய்வுப்பிரதேச மக்கள் தமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு இத்துறையினை எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பது தொடர்பாக பாசிக்குடா கடற்கரை வெளியில் சிறுகடைகளை நடாத்துவோர், கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வோர், நடமாடும் வியாபாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டி சாரதிகள் ஆகியோரிடம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர மேலதிக தகவல்களுக்காக உள்ளூர் மக்களிடமும் கலந்தாலோசிக்கப்பட்டது.

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை எவ்வாறு விற்பது என்பது தொடர்பாக தான் அறிந்திராத போது ஒரு ஆணின் உதவியை நாடியதாக ஒரு பெண் கூறினார். குறித்த நபர் தன்னிடம் மிகக் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்து அவற்றை கடற்கரையில் மிகக் கூடிய விலையில் விற்பதாவும் கவலை தெரிவித்தார் (நேர்காணல், 25 செப்டம்பர் 2020).

தனது கணவன் நோய்வாய்ப்பட்டு இருப்பதாலும், தனக்கு சந்தைப்படுத்தும் வலிமை இல்லாததாலும் தான் இவ்வாறானவர்களிடம் ஏமாறுவதாகவும், இதன் காரணத்தால் தனக்கு கிடைக்கும் வருமானம் போதியளவாக இல்லை எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை பாசிக்குடா கடற்கரையின் முன்வளாகத்தில் சிறிய கடை நடத்தும் சிலர் தமது கடைக்கு மீள் விற்பனைக்காக பொருட்களை கொள்வனவு செய்யும் அதேவேளை தாமும் சில பொருட்களை உற்பத்தி செய்வதாகக் கூறினர். தாம் கைவினைப் பொருட்கள், தீண்பண்டங்களை உற்பத்தி செய்வதனை அறிந்து பிரதேச செயலகத்திற்கு தம்மை அழைத்துப் பாராட்டியதாகவும், குறித்த தொழிலை மேலும் மேம்படுத்த ஆலோசனை கூறியதாகவும் நம்பிக்கை வெளியிட்டனர் (கலந்துரையாடல், 25 செப்டம்பர் 2020).

பாசிக்குடா கடற்கரை முன்றலில் ஐஸ்கிரீம் விற்கும் பல நடமாடும் வியாபாரிகள் காணப்படுகின்றனர். கைத்தொழில் அல்லது சுயதொழில் தொடர்பான கருத்துக்களை வினவிய போது தமது வியாபாரம் நிச்சயமற்ற வருமான வழியாகும் என்றும் வெயில் குறைந்த அல்லது மழைகாலங்களில் தாம் வருமானமின்றி தவிக்க வேண்டி வருகிறது என்றும் கூறினர் (கலந்துரையாடல், 26 செப்டம்பர் 2020).

மேலும், இந்த மனிதர்களிடம் தங்களது சுயதொழில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது எனக் கருதுகிறீர்கள் என வினவிய போது பின்வருமாறு கருத்துக் கூறினர். பெரும்பாலும் தமது வருமானம் அன்றாடத் தேவைக்கும் பிள்ளைகளின் கல்வி மற்றும் மருத்துவ செலவுக்குமே போதாமல் இருக்கிறது என குறிப்பிட்டனர்.

அத்தோடு தன்னுடைய பெயரை வெளிப்படுத்த விரும்பாத நடமாடும் வியாபாரி இவ்வாறு குறிப்பிட்டார். கடற்கரைக்கு மிக அருகில் இராணுவத்தினரால் கடை நடாத்தப்படுவதும் தமது வருமான வழியை வெகுவாகக் குறைக்கிறது. எனவே, சிங்கள மொழி பேசும் சுற்றுலாப் பயனிகள் பெரிதும் அந்தக் கடைக்குச் சென்று பொருள் கொள்வனவு செய்வதனையே விரும்புகின்றனர் எனவும் கூறினார் (நேர்காணல், 26 செப்டம்பர் 2020).

குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் காணப்பட்ட துவிச்சக்கர வண்டிகளில் பெரும்பாலானவை வெளியிடங்களில் இருந்து வருகை தந்தவையாகும். ஓரிரண்டு மாத்திரம் குறித்த பிரதேச வாசிகளின் துவிச்சக்கர வண்டிகளாக காணப்பட்டன. அந்த சாரதிகள் தமது வருமானம் குறித்து கவலை தெரிவித்தனர். வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகள் குறித்த பிரதேசத்துக்குள் நுழையும் முன்பே சுற்றுலா நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும், பின்னர் அனைத்து போக்குவரத்துக்களும் குறித்த சுற்றுலா நிறுவனத்தின்

வாகனங்களிலேயே இடம்பெருவதால் தமக்கு சவாரிகள் கிடைப்பது குறைவு எனவும் குறிப்பிட்டனர். அத்தோடு தமக்கு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் பெரியளவான பாண்டித்தியம் இண்மையால் பிறமொழி பேசும் சுற்றுலா பயணிகள் தமது துவிச்சக்கர வண்டியில் சவாரி செல்ல தயக்கம் காட்டுவதாகவும் குறிப்பிட்டார். விளைவாக, அவர்களின் வருமாண மட்டம் குறைவாக காணப்படுகின்றது (கலந்துரையாடல், 26 செப்டம்பர் 2020).

**2. சுற்றுலாத்துறை சார்ந்த சமூகத்தாக்கம்**

**2.1. கலாசார மேம்பாட்டில் சுற்றுலாத்துறை**

சர்வதேச நாடுகள் மற்றும் பிற பகுதிகளிலிருந்து சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றமையினால் பல கலாசார, நாகரீக தொடர்புகள் குறித்த பிரதேசத்தில் ஏற்படுகின்றன. இவ்வாறான தொடர்புகளால் பல நன்மை, தீமைகள் விளைவதாக உள்ளூர் வாசிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

வயதான இரண்டு பெண்களிடம் இது பற்றிய கலற்துரையாடலின்போது தமது பகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளால் இளம் சந்ததியினர் பல மோசமான பழக்கங்களுக்கு ஆளாவதாக குறிப்பிட்டார்கள். இதற்கு காரணங்களை வினவிய போது அவர்கள் குடிப்பழக்கம் ஏனைய போதைவஸ்த்துக்கள் போன்றவற்றிற்கு அடிமைப்படுவதாக கூறினர் (கலந்துரையாடல் 27 செப்டம்பர் 2020).

குறித்த பிரதேசத்தில் பிறந்தது முதல் வாழ்ந்து வரும் 52 வயதான ஒரு ஆண் கலாசாரத்தில் சுற்றுலாத்துறை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார் “இங்கு வருகை தருபவர்களை பார்த்து எமது மக்கள் தமது பாரம்பரிய கலாசார முறைமைகளை மாற்றிக்கொள்ள எத்தனிக்கின்றனர். அவர்கள் தமது ஆடை முறைகள், உணவுப்பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டுள்ளனர். இக்கருத்தை தெரிவிக்கும்போது அவரது முகத்தில் கவலை தென்பட்டது (கலந்துரையாடல் 27 செப்டம்பர் 2020).

குறித்த அதே பகுதியை சேர்ந்த இளைஞர்கள் பின்வரும் கருத்தில் காணப்பட்டனர்.“பல முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து வருகை தரும் சுற்றுலா பயணிகள் மூலம் தமது வாழ்க்கை முறை (நாகரிகம்) மேம்பட்டுள்ளதாகவும், அவர்களுடன் உரையாடுவதற்காகவே தாம் ஆங்கில மொழி கற்றுக்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தனர்”.

எது எவ்வாராயினும் பல கோணங்களிலிருந்து வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் மூலம் குறித்த பிரதேசம் நல்ல மாற்றங்களுக்கும் சிலவேலை தவறான மாற்றங்களுக்கும் முகம்கொடுக்கவேண்டிய சூழலுக்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

**3.சுற்றுலாத்துறை சார்ந்த சூழல் தாக்கம்**

**3.1. கரையோர வளங்களை பாதுகாப்பதில் சுற்றுலாத்துறை**

பாசிக்குடா பிரதேசமானது ஆழமற்ற கடற்பரப்பு, அலை குறைந்த கடல் நிலைமை கொண்ட பிரதேசமாகும். அதனை சூழவுள்ள இயற்கைவளம் எண்ணற்றதும் விலைமதிக்க முடியாததுமாகும். பாசிக்குடா முனைப்பகுதியானது வன்மையான பாறைகளாளும், முருகை கற்பாறைகளாளும் சூழப்பட்ட அழகு பொருந்திய பகுதியாகும். இது கடற்புல், புறா ஆகிய பறவை இனங்களின் தங்குமிடமாகவும் கானப்படுகின்றது.

குறித்த விடயம் தொடர்பாக உள்ளூர்வாசிகளிடம் வினவியபோது பலரும் நல்ல கருத்துக்களை தெரிவித்தபோதும், ஒரு சிலர் முரனாகவும் கருத்து வெளியிட்டனர். 50வயது மதிக்கத்தக்க ஊர்வாசி பின்வருமாரு குறிப்பிட்டார்.“யுத்தகால பகுதியில் சுண்ணக்கற்கள் பாறைகள் சட்டரீதியற்ற முறையில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

அதிகமாக அகழப்பட்டன. எனினும், யுத்தம் முடிவுற்று சுற்றுலாத்துறை விருத்தியடைந்ததன் பின்னர் இவை சட்டரீதியாக தடுக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன'' (நேர்காணல் 28 செப்டம்பர 2020).

எனினும் மற்றுமொரு ஊர்வாசி குறித்த விடயம் தொடர்பாக கருத்துக் கூறுகையில் ''சுற்றுலாத்துறைக்கான விருத்தியின்போது பாரிய ஹோட்டல் திட்டங்கள் வருவதற்கு முன் இப்பிரதேசம் பசுமை நிறைந்த தென்னந்தோட்டங்களும் தாவர போர்வைகளும் நிறைந்து காணப்பட்டன. ஆனால், ஹோட்டல்களின் கட்டுமானங்களுக்காக பாரியளவான இயற்கைவளங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டார் (நேர்காணல் 28 செப்டம்பர 2020).எவ்வாறாயினும் அதிகமானோரின் கருத்துப்படி சுற்றுலாத்துறையின் விருத்தியினால் கரையோர வளங்கள் அரச நிறுவனங்களினால் கண்காணிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றதனை அவதானிக்க முடிந்தது (நேரடி அவதானிப்பு, 28 செப்டம்பர் 2020).

### 3.2.கடல் மாசுபடுதலில் சுற்றுலாத்துறை

கடல் வளம் என்பது நீலப் பசுமை பொருளாதாரத்தின் அச்சானியாகும் அது மாசுபடுத்தப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் பாரிய அழிவை நோக்கி செல்லும் பாதிப்பு காணப்படுகின்றது. அந்த வகையில் வாழ்க்கை தரத்தின் ஓர் அங்கமாக சூழல் மேம்பாடு கானப்படுவதனால் வாழ்க்கைதர மேம்பாட்டுக்கு சூழல் விடயத்தில் அதிகம் கவனம்செலுத்துவதும் அவசியம் என்பதுடன் சுற்றுலாத்துறை சூழல் மேம்பாட்டில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனை அவதானிக்கவேண்டியுள்ளது.

இது குறித்து உள்ளுர்வாசிகளிடம் வினவியபோது யுத்தகாலங்களில் சூழல் மாசடைவு அதிகம் காணப்பட்டதாகவும் கரையோர பிரதேசங்களில் திண்மக்கழிவுகள் அதிகளவு காணப்பட்டதாகவும் தெரிவித்தனர் (கலந்துரையாடல், 29 செப்டம்பர் 2020). ஆனால், சுற்றுலா துறையின் வளர்ச்சியின் பின் சுற்றுலா சபையுடன் இணைந்து இரானுவம் மற்றும் பல தனியார் குழுக்களின் பங்களிப்புடன் பாசிக்குடாவின் இயற்கை அழகு பாதுகாக்கப்பட்டு, மாசடைவதிலிருந்தும் பாதுக்காக்கப்படுகின்றது (நேரடி அவதானிப்பு, 29 செப்டம்பர் 2020).

### ஆய்வின் முடிவுகள்

பாசிக்குடா பகுதியை மையப்படுத்தியதாக வாழ்க்கைத் தர விருத்திக்கு சுற்றுலாத்துறையின் பங்களிப்பினை கண்டறிவதற்கு தரவு சேரிப்பின் நுட்பங்களைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு முடிவுகள் பின்வருமாறு.

குறித்த ஆய்வு பிரதேசத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் திட்டங்களின்போது குறித்த பிரதேச மக்களோடு அல்லது திட்டங்களால் நேரடியாக பாதிப்புக்குள்ளாகியுள்ள மீனவர்களோடு கலந்தாலோசனைகளை நடாத்தப்படவில்லை அல்லது அரிதாகவே நடாத்தப்பட்டுள்ளது.

மீன்பிடி தொழிலையே தமது ஜீவனோபாயத்துக்கான வழிமுறையாக கொன்டிருந்த மக்களின் மீன்பிடித்தலுக்கான இயலுமை அல்லது வசதிகள் முன்னர் இருந்ததை விட குறைவடைந்துள்ளது இதற்கு சுற்றுலாத்துறை விருத்திக்கான வேைலை திட்டங்களே காரணமாகும்.

மீனவர்கள் கடற்கரைக்கு அருகில் உள்ள தமது இடங்களை விட்டும் தூரப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால், அவர்களது மீன்பிடி தொழிலில் மேலதிக சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற பிரபல்யமான ஹோட்டல்களில் உள்ளுர் வாசிகளுக்கான வேலைவாய்ப்பு மிக அரிதாகவே காணப்படுகின்றது. பெற்றுக்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்புகளும் கீழ் மட்டத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.


© 2021, IRJTSR

குறித்த ஹோட்டல்களில் கீழ் மட்டத்தில் பணியாற்றும் உள்ளூர்வாசிகளுக்கு போதிய ஊதியம் வழங்கப்படவில்லை என்பதோடு அவர்களுக்கு வேலை உத்தரவாதமும் கிடையாது.

உள்ளூர் உற்பத்தி பொருட்கள் மற்றும் கைவினை பொருட்கள் என்பவற்றை தயாரிப்பது குறித்த மக்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தொழிலில் ஈடுபடுகின்ற சிலருக்குகூட அவற்றை இலாபம் தரக்கூடியதாக உரிய முறையில் சந்தைப்படுத்தும் அறிவோ அல்லது திட்டமிட்ட வசதியோ போதியளவு காணப்படவில்லை.

ஒப்பீட்டளவில் பார்க்கும் போது யுத்தகால பகுதியை விட சுற்றுலாத்துறையில் அபிவிருத்தியின் பின்னர் குறித்த பிரதேசத்தில் பல்வேறுபட்ட நேர் மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகள் காணப்படுகின்றன.

சுற்றுலாத்துறையை பயன்படுத்தி வருமாண மட்டத்தை அதிகப்படுத்திக்கொள்வதற்கான போதியளவு ஆற்றல் மற்றும் மொழிவளம் என்பன குறித்த பிரதேச மக்களிடம் காணப்படவில்லை

சுற்றுலாத்துறை மூலம் உள்ளூர்வாசிகளிடம் புதிய நாகரீகம் முன்னேற்றம் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன் கலாசாரத்தை சீரழிக்கும் வகையிலான கெட்ட பழக்கவழக்கங்களும் ஊடுருவுகின்றன.

ஒப்பீட்டளவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு பின்னர் பாசிக்குடாபகுதி பல அரச தனியார் நிறுவனங்களினாலும் கண்காணிக்கப்படுவதால் அங்குள்ள இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அத்தோடு கடல் மாசடைவதும் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

சுற்றுலாத்துறை மூலமாக நாட்டிற்கு கிடைக்கின்ற பொருளாதார அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தர மேம்பாடுகள் என்பன பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டவையாகும். எனினும், ஆய்வின் முடிவில் கூறப்பட்ட பல தடைகள் மற்றும் பிரச்சினைகளால் குறித்த ஆய்வு பிரதேசத்தில் பிரபல்யமான சுற்றுலா தளம் அமைந்திருந்தும்கூட பிரதேச மக்களின் வாழ்க்கை தர மேம்பாட்டில் போதியளவு வளர்ச்சியின்னை காணப்படுகின்றது அல்லது இல்லாமல் இருக்கின்றது.

எனவே, தடைகளை நீக்கி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் சுற்றுலாத்துறையினை வினைத்திறனாக பயன்படுத்தி வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முடியும். அதனை நோக்காக கொன்டு பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

- குறித்த பிரதேசத்தில் எந்தவொரு செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் உள்ளூர்வாசிகளுடன் கலந்துரையாடலை மேற்கொன்டு பொருத்தமான உடன்பாடுகளுக்கு வருதல். அதன்பின்னரே செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனுமதியினை வழங்க வழிசெய்தல் வேண்டும்.
- உள்ளூர் கடற்தொழிலாளிகள் தடையின்றி கடலை அடைவதற்கு வழி செய்ய வேண்டும். இதற்கு குறுக்கு வழி பாதைகளை அமைத்தல் அவர்களின் நெடுந்தூர பயணத்தை குறைக்க வழிகோலும்.
- குறித்த பிரதேசத்தில் படகுகளை நங்கூரமிடுவதற்கான இட நெருக்கடியைக் குறைக்கவும், கடற்தொழிலை மேம்படுத்தவும் பொருத்தமான மீன்பிடி துறைமுகத்தை அமைக்க வேண்டும்.
- குறித்த சுற்றுலா வலயத்தில் வாழும் மக்களின் வேலைவாய்ப்புக்கான திறன்களை விருத்தி செய்வதற்காக வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். இதற்கு குறித்த பகுதியில் சிறந்த ஹோட்டல் பாடசாலைகளை உருவாக்கலாம்.



© 2021, IRJTSR 

- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் இளைஞர் யுவதிகளின் மொழியாற்றலை வளர்ப்பதற்கு அரசாங்கம் விஷேடமான இலவச பாடநெறிகளை குறித்த பிரதேசத்திலேயே அறிமுகம் செய்யலாம். இத்திட்டத்தை ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளை துரிதமாக பேச பழகுவதற்கு வடிவமைத்து, அதில் நடமாடும் வியாபாரிகள், ஹோட்டல்களில் வேலை செய்ய விரும்புவோர், ஆட்டோ சாரதிகள் என்போரை உள்வாங்க முடியும்.

- குறித்த பிரதேசத்தில் காணப்படும் ஹோட்டல்களில் விகிதாசார அடிப்படையில் வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆவணம் செய்தல். அத்தோடு வேலை செய்வோரின் சம்பள நடைமுறை, அவர்களின் வேலை உத்தரவாதம் என்பவற்றை அரசு உறுதிப்படுத்துதல்.

- ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் சமூக அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் என்பவற்றிற்கூடாக கைத்தொழில் வழிகாட்டல் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல். அத்தோடு தமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க பிரதேச செயலகத்தினூடாக முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுதல்.

- சுற்றுலாத்துறையினால் சமூகச் சீர்கேடுகள் ஏற்படும்போது அல்லது குற்றச் செயல்கள் இடம் பெறும்போது பொது மக்கள் மிக இலகுவாக முறைப்பாடுகளை மேற்கொள்ள வழிசெய்தல்.

- சூழல் பாதுகாப்பிற்கும், சூழலை மாசுபடுத்தலில் இருந்து சுத்தமாக பேணுவதற்கும் தன்னார்வக் குழுக்களை ஊக்குவித்தல்.

மேற்குறித்த பரிந்துரைகளை அரசு, அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன முன்வந்து நடைமுறைப்படுத்தும் போது குறித்த பிரதேசத்தில் சுற்றுலாத்துறையின் மூலம் வாழ்வாதார மேம்பாட்டை எதிர்பார்க்க முடியும்.

**முடிவுரை**

கல்குடாவில் அமைந்துள்ள பாசிக்குடா எனும் சுற்றுலாத்தளம் நன்கு திட்டமிடப்பட்டு, எல்லா விதமான அபிவிருத்திகளிலும் உள்ளூர் வாசிகளின் வாழ்க்கைத்தரம் கவனத்திற் கொள்ளப்படுமானால் சுற்றுலாத்துறை மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், பிராந்திய, தேசிய பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தவும் முடியும் என நம்பப்படுகின்றது.

இதற்கு இலங்கை சுற்றுலா சபை, சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா அமைச்சு, உள்ளூர் மக்கள், தனியார்/பொது அமைப்புக்களின் பங்களிப்பும் ஈடுபாடும் அவசியமானதாகும்.

**உசாத்துணைகள்:**

[1] இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, (2020).

[2] S,Akama,(1999). The evolution of tourism in kenya, Journal of Snstainable Development, 7(1), 6- 25

[3] F,Aref,(2011), The effects of Tourism on Quality of life :A case study of Shiraz, lran life Science Joumal, 8 (1), 26 – 30.

[4] Borbala Gondos, (2014) Reletionship between Tourism and Quality of life – Research at CAKE BALATON, International Conforence – 2014, Portoroz, Slovenia.

[5] E,Constanta,(2009). The Impact of tourism in enhancing the quality of life, Review of International Comparative Management. 347 – 351.

[6] J, Godfrey,(2002), Standard of Living or Quality of Life: Does one come first?, TD forum.

[7] R,Ranasinghe, (2015),Strategic myopia of tourism of tourism development in Srilanka : A Critique, international tournal of Multidisciplinary Research and development, 2(2), 604 – 9.

[8] Ratnapala Nandasena, (1999), “Tourism in Sri Lanka: The social impact”, Vishva Lekha, Ratmalana.

[9] UNWTO (United Nations World Tourism Organization) report (2017) Sastainable tourism development.

[10] USAID (United States Agency for International Development ) (2012). Tourism income genorating and business opportarity mapping in Batticaloa district.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்